## 21.1 பேரூராட்சி எல்லையில் அமைந்துள்ள சொத்துக்கள் – ஊராட்சி ஒன்றியத்தால் பராமரிக்கப்படுபவை – பேரூராட்சிகளுக்கு ஒப்படைத்தல்

நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை

அரசாணை எண். 298 நாள் : 20.11.1996

1) அரசாணை எண் 139 ந.நி (மற்றும்) கு.வ துறை நாள் 31.5.94.
2) பேரூராட்சிகள் இயக்குநரின நே.மு.க.எண் 14095/94/ C2 தேதி 30.6.94 மற்றும் 22.9.94.

**ஆணை**

பார்வை 1ல் காட்டப்பட்டுள்ள அரசாணையின்படி, அனைத்து பேரூராட்சி அமைப்புகளும் தமிழ்நாடு நகராட்சி சட்டம் 1920 ன் கீழ் கொண்டு வரப்படுவதாக அறிவித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக பேரூராட்சிகளுக்கு சொந்தமான சொத்துக்களான, சந்தைகள், மார்க்கெட்டுகள், சாலைகள் ஆகிய பேரூராட்சியின் எல்லைக்குட்பட்ட சொத்துகளின் மீது ஊராட்சி ஒன்றித்திற்கு எந்த ஆளுகையும் கிடையாது என்றாகின்றது.

பார்வை 2ல் காட்டப்பட்டுள்ள பேரூராட்சிகள் இயக்குநரின் கடித்தில், பேரூராட்சிகளுக்கு சொந்தமான, சந்தைகள், பூங்காக்கள், விளையாட்டுத் திடல்கள், கண்மாய்கள், ஏரிகள், சாலைகள், மாட்டுத் தொழுவம், சாவடிகள் போன்ற பேரூராட்சியின் எல்லைக்குட்பட்ட சொத்துக்கள். இன்னும் ஊராட்சி ஒன்றியத்தால் பராமரிக்கப்படுகின்றன என்றும், பேரூராட்சிகளுக்கு மிகக் குறைந்த வருமானமே கிடைக்க கூடிய சொத்துக்களே உள்ளன என்றும், பேரூராட்சியின் வருமானத்தை அதிகரிக்க, பேரூராட்சியின் எல்லையில் அமைந்துள்ள அனைத்து சொத்துக்களையும் ஊராட்சி ஒன்றியம் பேரூராட்சிக்கு ஒப்படைக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

அரசு இந்த விஷயத்தை ஆய்வுசெய்தது. பேரூராட்சியின் ஆளுகைக்குட்பட்ட எல்லையில் அமைந்துள்ள சொத்துக்ளை, ஊராட்சி ஒன்றியத்திலிருந்து பராமரிப்புக்காகவும் நிர்வாகத்திற்காகவும். பேரூராட்சிகளுக்கு மாற்றிட அரசு முடிவு செய்கிறது. எனவே பேரூராட்சியின் ஆளுகைக்கு உட்பட்ட ஊராட்சி ஒன்றியத்தால் தற்போது பராமரிக்கப்படும் சொத்துக்களை, ஊராட்சி ஒன்றியத்திடமிருந்து பேரூராட்சிகளுக்கு பராமரிப்புக்காவும், நிர்வாகத்திற்காகவும் உடனடியாக மாற்றம் செய்யப்படுகிறது.இந்த ஆணை ஊரக வளர்ச்சித் துறையின் அலுவல் சாராக் குறிப்பு எண் 39586/C1/96–1 ஊ.வ.துறை 18.11.96 மூலம் இசைவு பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**எஸ். மாலதி**
அரசு செயலாளர்